MC 3/2025 PW1: முகிலா

க/பெ. கிறிஸ்டியன் ராஜ் தேதி :13.11.2025

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 12ல் ஒத்திக்கு ரூபாய் 12 லட்சத்தை நானே திரும்ப செலுத்தவேண்டும் என்று எதிர்மனுதாரர் பிரச்சனை செய்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒத்தி தொகை என்பது இதற்கு முன்னால் உள்ள உரிமையாளரால் அங்கு வாடகைக்கு இருந்த நபரிடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக யார் ஒத்திக்கு வாங்கினார்களோ அவர்கள் தான் ஒத்தி பணத்தை திரும்ப கொடுப்பார்கள் என்றும், கிரையம் வாங்கிய நானோ எனது கணவரோ ஒத்தி பணத்தை கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வீட்டின் உரிமையாளரின் கணவர் இறந்துவிட்டார் அவரின் வாரிசுதாரர்கள் ஒத்தி பணத்தை எங்களை கொடுக்க சொல்லி கட்டாயப்படுத்தியதால் அதை நான் மூன்று மாதத்திற்கு முன்பு எனது நகைகளை அடகு வைத்து கொடுத்தேன்.

2) எங்களுக்கு கிரையம் கொடுத்த நபர் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.10 நீதிமன்ற வழக்கு எண் OS 203/2023 ன் இ-கோர்ட் விபரங்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வீட்டின் உரிமையாளர், அவர்கள் வாரிசுதாரர்கள், நான் மற்றும் எனது கணவர் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கில் எங்கள் தரப்பில் மேற்படி ஒத்தி தொகையை வீட்டின் உரிமையாளர் தான் கொடுக்க வேண்டும் என்றும், நாங்கள் எதிர்வாதம் செய்தோம் என்றால் எனது கணவர் தான் வழக்கு நடத்தினார். எனது பெயரில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் ஒத்தி தொகையை நாங்கள் திரும்ப செலுத்த வேண்டும் என்ற சரத்து இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறார் என்றாலும் ஆனால் நான் எனது தேவைக்காக நானாகவே முன்வந்து ரூபாய் 12,50,000/—ஒத்தி தொகையை செலுத்தியதாக ம.சா.ஆ.13 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கை நடத்தாததால் நான் மேற்படி ஒத்தி தொகையை செலுத்தினேன். எதிர்மனுதாரர் ஒழுங்காக வழக்கு நடத்தி வருகிறார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ம.சா.ஆ.13ல் சொல்லப்பட்டுள்ள ரூபாய் 12,50,000/— ஒத்தி தொகை நான் கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 என்னுடைய சம்பளவிபரத்தின் நகல் என்றால் சரிதான். அதில் எனது வருமானம் ரூபாய் 1,09,299 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் பிடித்தம் போக ரூபாய் 92,010/— எனக்கு கிடைக்கும். மேற்படி பிடித்தம் அனைத்தும் எனக்கு சேர வேண்டிய தொகை என்றால் சரிதான். ம.சா.ஆ.7 இரண்டாம் மனுதாரரின் கல்வி கட்டண ரசீது என்றால் சரிதான். அதில் வருட கட்டணமாக ரூபாய் 20,400/— என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 13ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் எதிர்மனுதாரரை சந்தேகப்படும் குணத்தை காட்டுகிறது என்றால் சரியல்ல, அவை அனைத்தும் உண்மை. பாரா 13ல் எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள டிவி மற்றும் பொருட்களை அடித்துநொறுக்கிவிட்டார் என்று சொல்லிய சங்கதிகள் எதிர்மனுதாரர் தாக்கல செய்த விவாகரத்து மனுவில் நான் செய்ததாக சொன்ன சங்கதிகளுக்கு எதிராக பொய் கதைகளை இந்த மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அதிக கோப குணம் உடையவர் என்றாலும் ஏற்கனவே டிவி, சேர் போன்ற பொருட்களை உடைத்துள்ளேன் என்றாலும் சுவீட்ச் போர்டை உடைத்து அதிலுள்ள

வயரை பிடித்து தற்கொலை செய்ய முயன்றேன் என்றால் சரியல்ல. எங்கள் இருவருக்கும் முதலில் நடந்த விவாகரத்து வழக்கில் IDOP 12/2022 ல் சமரச பேச்சுவார்த்தையின் போது இருதரப்பிலும் உள்ள நகைகள் அனைத்தும் அவரவர் தரப்பில் உள்ளது என்றும் ஒத்துக்கொண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் கடந்த 13.03.2024ம் தேதியன்று நடந்த சம்பவம் தொடர்பாக உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ம.சா.ஆ.5 மனு ரசீது வழங்கினார்கள் என்று எனது நிரூபண வாக்குமூலம் பாரா 14ல் சொல்லியுள்ளது சம்பந்தமாக மாவட்ட சமூக நல அலுவலகத்தில் விசாரணை நடந்தது என்றால் ஞாபகமில்லை. மேற்படி விசாரணையில் நான் கலந்துகொள்ளாததால் எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களை பார்த்து நான் கொடுத்த மனு பொய்யானது என தீர்மானித்து அந்த மனு முடித்துவைக்கப்பட்டது என்றால் சரியல்ல.நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் எதிர்மனுதாரர் என்னை வீட்டை விட்டு விரட்டவில்லை என்றாலும் நானாக தன்னிச்சையாக எதிர்மனுதாரருடன் இருக்காமல் பிரிந்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் 110 பவுன் நகை உள்ளது. நிரூபண வாக்குமூலத்தில் பாரா 22ல் ஐசிசி வங்கியில் கடனை அடைப்பதற்காக எனது நகையை அடகு வைத்ததாக சொல்லியுள்ளதற்கு மேற்படி நகை எனது பெயரில் வாங்கிய வீட்டின் கடனை அடைப்பதற்காக அடகு வைத்துள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் விக்கிரமங்கலத்தில் ரூபாய் 80 லட்சம் மதிப்பில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. நரியம்பட்டியில் 6 ஏக்கர் நிலமும் மோட்டார் தோட்டமும் 1 கோடி ரூபாய் மதிப்பில் உள்ளது என்றால் சரியல்ல. நான் விக்கிரமங்கலத்தில் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். எனது தாத்தா நாதன் பெயரில் விக்கிரமங்கலம் EB அலுவலகம் அருகே

சுமார் 1 கோடி மதிப்பிலான ஒரு ஏக்கர் நிலம் உள்ளது என்று அதில் எனக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அதை தாத்தா பெயரில் மதுரை ரோட்டில் 50 லட்சம் மதிப்பில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. கலைநகரில் எனது பெயரில் உள்ள வீடு ஒரு கோடி மதிப்பு என்றால் சரியல்ல.மேற்படி வீட்டில் ஒத்தி பணத்தை நான் திருப்பி விட்டதால் அதை நான் வாடகைக்கு விட்டு மாதம் ரூபாய் 40,000/- வாடகை பெறுகிறேன் என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால் சரிதான். 1ம் வகுப்பு படித்து வருகிறார். எதிர்மனுதாரரை விட பன்மடங்கு வசதி படைத்தவர் என்பதால் அவருடன் சண்டையிட்டு வேண்டுமென்று தன்னிச்சையாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வங்கியில் கடன் வாங்கி கஷ்டப்படுகிறேன் என்று சொல்வது சம்பந்தமாக நான் எனது பெயரில் வீடு வாங்கியதற்காக கடன் வாங்கியுள்ளேன் என்றால் எதிர்மனுதாரருக்கு கடன் கிடைக்காததால் என் பெயரில் கடன் வாங்க சொல்லி நான் வாங்கினேன். நான் வாரத்தில் மூன்று நாட்கள் சென்னையில் இருப்பேன் நான்கு நாட்கள் விக்கிரமங்கலத்தில் இருப்பேன். எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் நான் கேட்டுள்ள இடைக்கால ஜீவனாம்ச மனுவில் நான் சென்னையில்விடுதியில் தங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இடைக்கால ஜீவனாம்ச மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்குஅடிக்கடி சுற்றுலா செல்லும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. நான் செல்வசெழிப்போடு வாழ்ந்து சுற்றுலா பல இடங்களுக்கு சென்று சுகபோகமாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி இவ்வாறு சுற்றுலா செல்வதால் குழந்தையை சரிவர கவனிக்காததால் எதிர்மனுதாரர் தனது குழந்தையை தன்னிடம் ஒப்படைக்க கோரி GWOP 95/2025 என்ற வழக்கு தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போதும் எனது குழந்தையான 2ம் மனுதாரரை நல்ல முறையில் வளர்த்து பாதுகாக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் வீடு வாங்குவதற்கு எதிர்மனுதாரர் வங்கியில் கடன் பெற்றுக்கொடுத்து அதையும் அவர் தான் கட்டி வருகிறார் என்றால் சரியல்ல. இம்மனுவில் கோரிய பரிகாரம்எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.